பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 9

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 16

1 குறைந்த அமல்; பெரும் பிரதிபலன் 23

2 குர்ஆன் ஓதுவது 25

3 பல்லியைக் கொல்வது 27

4 தர்மம் புரிவது 28

5 இறைநம்பிக்கை கொண்டோருக்காகப் பாவமன்னிப்பு தேடுவது 29

6 பாதையை விட்டும் இடர்தருபவற்றை அகற்றுவது 30

7 ஒருவரையொருவர் சந்தித்துக்கொள்வதும் முஸாஃபஹா (கைலாகு) செய்துகொள்வதும் 31

8 வுளூ செய்வது 32

9 ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி சொல்வது 33

10 தூங்கும்போது ஓதப்பட வேண்டியவை 34

11 அஸ்தங்ஃபிருல்லாஹ் சொல்வது 36

12 ஐந்து நேரத் தொழுகைகளைத் தொழுது வருவது 37

13 ஸுப்ஹானல்லாஹ், அல்ஹம்து லில்லாஹ், அல்லாஹு அக்பர் சொல்வது 38

14 ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி ஸுப்ஹானல்லாஹில் அளீம் என்று சொல்வது 40

15 அல்ஹம்து லில்லாஹ் சொல்வது 42

16 உன் சகோதரரின் மானத்தைக் காப்பது; அவரைப் பற்றி புறம் பேசாதிருப்பது 44

17 நஃபில் நோன்பு நோற்பது 45

18 லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லாபில்லாஹ் சொல்வது 46

19 ஜமாஅத்தோடு தொழுவதும் தக்பீர் தஹ்ரிமாவை அடைந்துகொள்வதும் 47

20 நபி ﷺ அவர்களின்மீது ஸலவாத்து சொல்வது 48

21 ஆயத்துல் குர்ஸீயின் சிறப்பு 49

22 அல்லாஹ்வை இறைவனாகத் திருப்திகொண்டேன் 50

23 ஸய்யிதுல் இஸ்திங்ஃபார் – பாவமன்னிப்புத் தேடலில் தலையாயது 51

24 மஸ்ஜிது கட்டுவது 53

25 குல் ஹுவல்லாஹு அஹது ஓதுவது 54

26 பன்னிரண்டு ரக்அத் தொழுவது 55

27 நல்ல பேச்சு பேசுவதும் அடுத்தவர்களுக்கு உணவளிப்பதும் 56

28 இறந்தவரைக் குளிப்பாட்டுவதும் அவருக்குக் கஃபன் அணிவிப்பதும் 58

29 ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி என்பதாகக் கூறுவது 60

30 கோபத்தை மறைத்துக்கொள்வது 61

31 பெற்றோருக்காகப் பாவமன்னிப்புத் தேடுவது 62

32 வுளூவும் அதற்குப் பின்னுள்ள திக்ரும் 63

33 மஸ்ஜிதில் ஃபஜ்ரு தொழுதுவிட்டு, சூரியன் உதயமாகிற வரை அமர்வது 65

34 ஃபர்ளு தொழுகையை ஜமாஅத்தாக தொழுவதற்காக நடந்து செல்வது 66

35 ஜுமுஆ தினம் 68

36 லா இலாஹ இல்லல்லாஹ் வஹ்தஹூ லா ஷரீகலஹூ லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர் என்று ஓதுவது 69

37 தவாஃப் செய்வதும் இரண்டு ரக்அத்துகள் தொழுவதும் 71

38 உணவு உண்டபின் அல்லாஹ்வைப் புகழ்வது 72

39 உறவினர்களைச் சேர்ந்து வாழ்வது 73

40 நற்குணம் 74

41 நற்குணங்கள் 75

42 ஒரு முஸ்லிம் தன் சகோதரரை உடல்நலம் விசாரிப்பது 76
43 கண்ணெதிரே இல்லாதவருக்குப் பிரார்த்திப்பது 77
44 நோன்பாளிக்கு நோன்பு திறக்க ஏதேனும் கொடுத்தலும் அல்லாஹ்வின் பாதையில் போர் செய்பவருக்காகப் பயண வசதி செய்துகொடுத்தலும் 78
45 அறப்போரில் வீரமரணம் அடைவது 79
46 சகோதர முஸ்லிமுக்குத் தோள் கொடுப்பது 80
47 ஜனாஸா தொழுகை 81
48 நேசம் வைப்பது 82
49 மக்களுக்குக் கல்வி கற்றுக்கொடுப்பது 83
50 அழகிய நடைமுறை 85
51 இரவின் மூன்றில் ஒரு பகுதியின் கடைசிப்பகுதி 87
52 ளுஹா தொழுகை 88
53 அல்முல்க் அத்தியாயம் 89
54 ஷவ்வாலில் ஆறு தினங்கள் நோன்பு நோற்பது 90
55 தஸ்பீஹ் செய்வது 91
56 அன்பு காண்பிப்பது 92
57 பிஸ்மில்லாஹில்லதீ லா யளுர்ரு மஅஸ்மிஹி ஷைஉன் ஃபில் அர்ளி வலா ஃபிஸ்ஸமாஇ வஹுவஸ்ஸமீஉல் அளீம் 93
58 அல்கஹ்ஃப் அத்தியாயம் ஓதுவது 95
59 தர்க்கம் புரிவதும் பொய் பேசுவதும் 96
60 பாங்கு சொன்னபின் ஓதும் துஆ 97
61 லைத்துல் கத்ர் 98
62 றமளானில் நோன்பு நோற்பது 99

1

குறைந்த அமல்; பெரும் பிரதிபலன்

❁

முதலீடு: மூன்று முறை கீழுள்ள பிரார்த்தனையைக் கூறுதல்

سُبْحَانَ اللَّهِ وَبِحَمْدِهِ عَدَدَ خَلْقِهِ وَرِضَا نَفْسِهِ وَزِنَةَ عَرْشِهِ وَمِدَادَ كَلِمَاتِهِ

ஸுப்ஹானல்லாஹி வபி ஹம்திஹி அதத கல்கிஹி, வ ரிளா நஃப்சிஹி, வ ஸினத்த அர்ஷிஹி, வ மிதாத கலிமாத்திஹி

பொருள்: அல்லாஹ்வுடைய படைப்புகளின் எண்ணிக்கை அளவுக்கும், அவனது ஆன்மா பொருந்திக்கொள்ளும் அளவுக்கும், அவனது அர்ஷின் எடையளவுக்கும், அவனுடைய சொற்களின் எண்ணிக்கை அளவுக்கும் அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து அவனைத் தூயவன் எனத் துதிக்கிறேன்.

முதலீட்டின் காலம்: ஒரு நிமிடத்தைவிட குறைவான நேரம்

நிகர இலாபம்: நீண்ட நேரம் அல்லாஹ்வை நினைவுகூர்ந்தவருக்குக் கிடைக்கும் நன்மைகள்

ஆதாரம்: ஜுவைரியா பின்த் ஹாரிஸ் ﵂ அவர்களிடமிருந்து இப்னு அப்பாஸ் ﵄ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

عَنِ ابْنِ عَبَّاسٍ عَنْ جُوَيْرِيَةَ أَنَّ النَّبِيَّ -صلى الله عليه وسلم- خَرَجَ مِنْ عِنْدِهَا بُكْرَةً حِينَ صَلَّى الصُّبْحَ وَهِيَ فِي مَسْجِدِهَا ثُمَّ رَجَعَ بَعْدَ أَنْ أَضْحَى وَهِيَ جَالِسَةٌ فَقَالَ مَا زِلْتِ عَلَى الْحَالِ الَّتِي فَارَقْتُكِ عَلَيْهَا . قَالَتْ نَعَمْ. قَالَ النَّبِيُّ -صلى الله عليه وسلم- لَقَدْ قُلْتُ بَعْدَكِ أَرْبَعَ كَلِمَاتٍ ثَلاَثَ مَرَّاتٍ لَوْ وُزِنَتْ بِمَا قُلْتِ مُنْذُ الْيَوْمِ لَوَزَنَتْهُنَّ سُبْحَانَ اللَّهِ وَبِحَمْدِهِ عَدَدَ خَلْقِهِ وَرِضَا نَفْسِهِ وَزِنَةَ عَرْشِهِ وَمِدَادَ كَلِمَاتِهِ

(நபி ﷺ அவர்களின் மனைவி) ஜுவைரியா ﵂ அவர்கள் கூறியதாவது: நபி ﷺ அவர்கள் சுப்ஹுத் தொழுகைக்குப்பின் அதிகாலையில் என்னிடமிருந்து புறப்பட்டுச் சென்றார்கள். அப்போது

6

பாதையை விட்டும் இடர்தருபவற்றை அகற்றுவது



முதலீடு: பாதையில் மக்களுக்குத் தொல்லையாக உள்ள மரத்தை அகற்றுவது

முதலீட்டின் காலம்: ஒரு மணி நேரமோ அல்லது அதைவிட குறைவான நேரமோ ஆகும்

நிகர இலாபம்: சுவனத்தில் உல்லாசமாகச் சுற்றித்திரிவது

ஆதாரம்: நபி ﷺ அவர்கள் கூறியதாக அபூ ஹுறைறா ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

لَقَدْ رَأَيْتُ رَجُلًا يَتَقَلَّبُ فِي الْجَنَّةِ، فِي شَجَرَةٍ قَطَعَهَا مِنْ ظَهْرِ الطَّرِيقِ، كَانَتْ تُؤْذِي النَّاسَ

‘பாதையின் நடுவில் மக்களுக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்த ஒரு மரத்தை ஒரு மனிதர் வெட்டியதற்காக (வெட்டி அப்புறப்படுத்தியதற்காக) அவர் சுவனத்தில் சுற்றித்திரிவதை நான் கண்டேன்.’ (முஸ்லிம் 1914)

9

ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி சொல்வது

❁

முதலீடு: நூறு முறை இதை ஓதுவது

سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ

ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி

பொருள்: அல்லாஹ் மிகத் தூயவன்; அவனுக்கே அனைத்துப் புகழும்.

முதலீட்டின் காலம்: இரண்டு நிமிடங்கள்

நிகர இலாபம்: பாவங்கள் மன்னிக்கப்படும்

ஆதாரம்: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறியதாக அபூ ஹுறைறா ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

مَنْ قَالَ سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ فِي يَوْمٍ مِائَةَ مَرَّةٍ، حُطَّتْ خَطَايَاهُ وَإِنْ كَانَتْ مِثْلَ زَبَدِ الْبَحْرِ

‘யார் ஒரு நாளில் நூறு முறை ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி என்று சொல்வாரோ அவரின் பாவங்கள் மன்னிக்கப்படும். அவை கடல் நுரை போன்று அதிகமாக இருந்தாலும் சரி.’ (புகாரீ 6042, முஸ்லிம் 2691)

அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்:

وَالذَّاكِرِينَ اللَّهَ كَثِيرًا وَالذَّاكِرَاتِ أَعَدَّ اللَّهُ لَهُمْ مَغْفِرَةً وَأَجْرًا عَظِيمًا

அல்லாஹ்வுடைய பெயரை அதிகமாக நினைவுகூரும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான கூலியையும் தயார்ப்படுத்தி வைத்திருக்கின்றான். (குர்ஆன் 33:35)

14

ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி ஸுப்ஹானல்லாஹில் அளீம் என்று சொல்வது



முதலீடு: கீழுள்ளவாறு நினைவுகூர்வது

سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ، سُبْحَانَ اللهِ الْعَظِيمِ

ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி ஸுப்ஹானல்லாஹில் அளீம்

பொருள்: அல்லாஹ் மிகத் தூயவன். அவனுக்கே புகழ் அனைத்தும். மகத்துவம் நிறைந்த அல்லாஹ் மிகவும் தூயவன்.

முதலீட்டின் காலம்: ஒரு நிமிடம் அல்லது அதைவிட குறைவான நேரம்

நிகர இலாபம்: மறுமையில் நன்மைகளின் தராசுத் தட்டைக் கனமாக்கிவிடும்

ஆதாரம்: நபி ﷺ அவர்கள் கூறியதாக அபூ ஹுறைறா ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

كَلِمَتَانِ خَفِيفَتَانِ عَلَى اللِّسَانِ، ثَقِيلَتَانِ فِي الْمِيزَانِ، حَبِيبَتَانِ إِلَى الرَّحْمَنِ: سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ، سُبْحَانَ اللهِ الْعَظِيمِ

'இரண்டு வாக்கியங்கள் நாவுக்கு எளிதானவை. (நன்மை, தீமைகள் எடை போடப்படும்) தராசில் கனமானவை. அர்ரஹ்மானின் பிரியத்திற்குரியவை. அவை: ஸுப்ஹானல்லாஹில் அளீம். ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி (அல்லாஹ்வை அவன் புகழைக் கொண்டு போற்றுகிறேன்; மகத்துவம் நிறைந்த அல்லாஹ்வைத் துதிக்கிறேன்) என்பதாகும்.' (புகாரீ 6304, முஸ்லிம் 2694)

அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்:

17

நஃபில் நோன்பு நோற்பது



முதலீடு: அல்லாஹ்வின் பாதையில் இருந்துகொண்டு ஒரு நாள் நோன்பு நோற்பது

முதலீட்டின் காலம்: ஃபஜ்ரிலிருந்து மஃக்ரிப் வரை

நிகர இலாபம்: நோன்பு நோற்றவரின் முகத்தை எழுபது ஆண்டுகள் தொலைதூரம் நரக நெருப்பை விட்டும் அப்புறப்படுத்தப்படும்

ஆதாரம்: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறத் தாம் கேட்டதாக அபூ ஸயீதுல் குத்ரீ ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

مَنْ صَامَ يَوْمًا فِي سَبِيلِ اللهِ, بَاعَدَ اللهُ بَيْنَهُ وَبَيْنَ النَّارِ بِذَلِكَ الْيَوْمِ سَبْعِينَ خَرِيفًا

‘யார் அல்லாஹ்வின் பாதையில் (இருக்கும்போது) ஒரு நாள் நோன்பு நோற்றாரோ அவரின் முகத்தை அல்லாஹ் நரக நெருப்பை விட்டும் எழுபது ஆண்டுகள் தொலைவிற்கு அப்புறப் படுத்திவிடுவான்.’ (புகாரீ 2685, முஸ்லிம் 1153)

20

நபி ﷺ அவர்களின்மீது ஸலவாத்து சொல்வது

❁

முதலீடு: நபி ﷺ அவர்களின்மீது ஒரு முறை ஸலவாத்து சொல்வது

முதலீட்டின் காலம்: ஒரு நிமிடத்தைவிட குறைவான கால அளவு

நிகர இலாபம்: ஸலவாத்து சொன்னவருக்காக அல்லாஹ் பத்து அருள்களைப் பொழிவதும் பத்து பாவங்கள் அழிக்கப்படுவதும் பத்து அந்தஸ்துகள் உயர்த்தப்படுவதும் நடக்கும்

ஆதாரம்: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறியதாக அனஸ் இப்னு மாலிக் ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

مَنْ صَلَّى عَلَيَّ صَلَاةً وَاحِدَةً صَلَّى اللَّهُ عَلَيْهِ عَشْرَ صَلَوَاتٍ، وَحُطَّتْ عَنْهُ عَشْرُ خَطِيئَاتٍ، وَرُفِعَتْ لَهُ عَشْرُ دَرَجَاتٍ

'யார் என்மீது ஒரு முறை ஸலவாத்து சொன்னாரோ அல்லாஹ் அவரின்மீது பத்து முறை அருள்புரிவான். அவருக்குப் பத்து பாவங்கள் மன்னிக்கப்பட்டு, பத்து அந்தஸ்துகள் அவருக்காக உயர்த்தப்படும்.' (நசாயீ 1297, மிஷ்காத் 922)

அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்:

إِنَّ اللَّهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا

நிச்சயமாக அல்லாஹ் தன் வானவர்களிடம் தூதர் முஹம்மதை புகழ்கின்றான். அவனுடைய வானவர்கள் அவருக்காகப் பிரார்த்தனை செய்கிறார்கள். அல்லாஹ்வின்மீது நம்பிக்கைகொண்டு அவனுடைய மார்க்கத்தின்படிச் செயல்பட்டவர்களே! தூதரின்மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுங்கள். (குர்ஆன் 33:56)

41

நற்குணங்கள்



முதலீடு: நற்குணம்

முதலீட்டின் காலம்: அனைத்து நேரங்களும்

நிகர இலாபம்: மறுமைநாளில் நபி ﷺ அவர்களின் பிரியமும் நபியவர்களின் சபையை நெருங்கி இருப்பதும்

ஆதாரம்: ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் ﷺ அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள்,

إِنَّ مِنْ أَحَبِّكُمْ إِلَيَّ, وَأَقْرَبِكُمْ مِنِّي مَجْلِسًا يَوْمَ الْقِيَامَةِ, أَحَاسِنَكُمْ أَخْلَاقًا, وَإِنَّ أَبْغَضَكُمْ إِلَيَّ وَأَبْعَدَكُمْ مِنِّي مَجْلِسًا يَوْمَ الْقِيَامَةِ الثَّرْثَارُونَ وَالْمُتَشَدِّقُونَ وَالْمُتَفَيْهِقُونَ,فَقَالُوا: يَا رَسُولَ اللهِ, قَدْ عَلِمْنَا الثَّرْثَارُونَ, وَالْمُتَشَدِّقُونَ, فَمَا الْمُتَفَيْهِقُونَ؟ قَالَ: الْمُتَكَبِّرُونَ

‘(உலகில்) உங்களில் எனக்கு மிக விருப்பமானவரும், (மறுமை நாளில்) உங்களில் என்னிடம் நெருங்கியிருப்பவரும் யாரெனில் உங்களில் அழகிய குணமுடையோரே ஆவார்கள். (உலகில்) எனக்கு உங்களில் மிக வெறுப்பானவரும், மறுமைநாளில் என்னை விட்டும் தூரமாக இருப்பவரும் யாரெனில் கெட்ட குணமுள்ளவர்கள்; இன்னும் (பேணுதல் இல்லாமல்) அதிகம் பேசுபவர்கள் ஆவார்கள்’ என்பதாக அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள். (திர்மிதீ 2018, ஸஹீஹா 791)

48

நேசம் வைப்பது

❁

முதலீடு: அல்லாஹ்வுக்காக ஒரு முஸ்லிமை நேசிப்பது

முதலீட்டின் காலம்: வரையறை அற்றது

நிகர இலாபம்: அல்லாஹ்வின் அர்ஷின் நிழலிற்குக் கீழே நிழல் தேடிக்கொள்வது

ஆதாரம்: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறியதாக அபூ ஹுறைறா ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

إِنَّ اللهَ عز وجل يَقُولُ يَوْمَ الْقِيَامَةِ: أَيْنَ الْمُتَحَابُّونَ بِجَلَالِي؟, الْيَوْمَ أُظِلُّهُمْ فِي ظِلِّي, يَوْمَ لَا ظِلَّ إِلَّا ظِلِّي

அல்லாஹ் (மறுமைநாளில்) 'என்னைக் கண்ணியப்படுத்துவதற்காக ஒருவரையொருவர் நேசித்துக்கொண்டவர்கள் எங்கே? என்னுடைய (அர்ஷின்) நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத நாளில் என்னுடைய அர்ஷின் நிழலில் அவர்களுக்கு நான் நிழல் அளிக்கிறேன்' என்று கூறுவான். (முஸ்லிம் 2566)

53

அல்முல்க் அத்தியாயம்



முதலீடு: தபாரகல்லதீ என்று தொடங்கும் அல்மூல்க் அத்தியாயம் ஓதுவது

முதலீட்டின் காலம்: ஐந்து நிமிடங்கள்

நிகர இலாபம்: ஓதியவரின் பாவம் மன்னிக்கப்படும் வரை இந்த அத்தியாயம் பரிந்துரை செய்யும்

ஆதாரம்: நபி ﷺ அவர்கள் கூறியதாக அபூ ஹுறைறா ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

إِنَّ سُورَةً مِنَ القُرْآنِ ثَلَاثُونَ آيَةً شَفَعَتْ لِرَجُلٍ حَتَّى غُفِرَ لَهُ وَهِيَ سُورَةُ تَبَارَكَ الَّذِي بِيَدِهِ المُلْكُ

‘குர்ஆனில் மூப்பது வசனங்கள்கொண்ட ஓர் அத்தியாயம் உள்ளது. அது தன்னை ஓதியவருக்காக மன்னிப்பு வழங்கப்படும் வரை பரிந்துரை செய்யும். அதுதான் தபாரகல்லதீ பியதிஹில் முல்க் என்ற அத்தியாயமாகும்.’ *(திர்மிதீ 2891, மிஷ்காத் 2153)*

60

பாங்கு சொன்னபின் ஓதும் துஆ

முதலீடு: பாங்கு சப்தத்தைக் கேட்டபின் இதை ஓதுங்கள்:

اللَّهُمَّ رَبَّ هَذِهِ الدَّعْوَةِ التَّامَّةِ، وَالصَّلاَةِ القَائِمَةِ آتِ مُحَمَّدًا الوَسِيلَةَ وَالفَضِيلَةَ، وَابْعَثْهُ مَقَامًا مَحْمُودًا الَّذِي وَعَدْتَهُ

'அல்லாஹும்ம ரப்ப ஹாதிஹித் தஃவதித் தாம்மதி வஸ்ஸலாத்தில் காயிமதி ஆத்தி முஹம்மதனில் வஸீலத்த வல்ஃபளீலத்த வப்அஸ்ஹு மகாமம் மஹ்மூதனில்லதீ வஅத்தஹு.'

பொருள்: நிறைவான இந்த அழைப்பு மற்றும் நிலைபெற்றுவிட்ட தொழுகையின் இரட்சகனே! முஹம்மது ﷺ அவர்களுக்கு வஸீலா (சுவனத்தில் உள்ள உயர்பதவி) மற்றும் சிறப்பை நல்குவாயாக; நீ வாக்களித்துள்ளாயே அத்தகைய (போற்றுதலுக்குரிய இடமான) மகாமம் மஹ்மூதாவில் அவர்களை எழுப்புவாயாக.

முதலீட்டின் காலம்: ஒரு நிமிடத்தைவிட குறைவான நேரம்

நிகர இலாபம்: நபி ﷺ அவர்களின் பரிந்துரை கிடைக்கும்

ஆதாரம்: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறியதாக ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

مَنْ قَالَ حِينَ يَسْمَعُ النِّدَاءَ: اللَّهُمَّ رَبَّ هَذِهِ الدَّعْوَةِ التَّامَّةِ، وَالصَّلاَةِ القَائِمَةِ آتِ مُحَمَّدًا الوَسِيلَةَ وَالفَضِيلَةَ، وَابْعَثْهُ مَقَامًا مَحْمُودًا الَّذِي وَعَدْتَهُ، حَلَّتْ لَهُ شَفَاعَتِي يَوْمَ القِيَامَةِ

'யார் பாங்குச் சப்தத்தை செவியுறும்போது 'அல்லாஹும்ம ரப்ப ஹாதிஹித் தஃவதித் தாம்மதி வஸ்ஸலாத்தில் காயிமதி ஆத்தி முஹம்மதனில் வஸீலத்த வல்ஃபளீலத்த வப்அஸ்ஹு மகாமம் மஹ்மூதனில்லதீ வஅத்தஹு' என்று சொன்னாரோ மறுமைநாளில் அவருக்கு என் பரிந்துரை கிடைத்துவிடும்.' (புகாரீ 614)